# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| | | |
|---|---|---|
| தரம் - 10 | குடியுரிமைக்கல்வி | நேரம் :- 3.00 மணித்தியாலம் |

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி - I

**சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. கிரேக்க மொழியில் "Demos" என்பது பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது.
    1) அதிகாரம் 2) சனநாயகம் 3) மக்கள் 4) ஆட்சி

02. ஏதேன்ஸ் நகராட்சியில் பிரதான ஆட்சி நிறுவனமாக எது காணப்பட்டது.
    1) சட்டமன்றம் 2) பாராளுமன்றம்
    3) மக்கள் மன்றம் 4) நகராட்சி மன்றம்

03. கி.மு 6ஆம் நூற்றாண்டில் "வஜ்ஜி" எனும் ஆரியக் குடியேற்ற அரசொன்றில் குழுவாட்சி முறை நிலவிய நாடு.
    1) பாகிஸ்தான் 2) இந்தியா 3) பிரித்தானியா 4) இலங்கை

04. ஆங்கிலப் புரட்சி ஏற்பட்ட ஆண்டு.
    1) 1688 2) 1868 3) 1886 4) 1268

05. "மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சி முறை சனநாயக ஆட்சி முறையாகும்" இக் கூற்று யாரால் கூறப்பட்டது.
    1) சீலர் 2) அபிரகாம் லிங்கன்
    3) அரிஸ்ரோட்டில் 4) ஜீன் போடின்

06. இரு கட்சி முறை நிலவுகின்ற நாடுகளில் ஒன்று.
    1) இந்தியா 2) சீனா 3) கியூபா 4) பிரித்தானியா

07. நேரடி சனநாயக ஆட்சி முறை இடம் பெற்ற கிரேக்கத்தின் நகரம் யாது?
    1) எதேன்ஸ் 2) பரிஸ் 3) வஜ்ஜி 4) லண்டன்

08. "அரசின் அல்லது மக்களின் விருப்பங்களைக் கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்கு கொண்டுவரும் பிரதிநிதி அரசாங்கமாகும்" இக்கூற்று யாருடையதாகும்.
    1) பேராசிரியர் காணர் 2) ஜீ.டி.எச்.கோல்
    3) பேராசிரியர் ஹரலட் ஜே.லஸ்கி 4) சீலர்

09. பின்வருவனவற்றில் உரிமைகளாக அமையாதது.
    1) கல்வி கற்பதற்கான உரிமை
    2) விரும்பிய தொழிலை செய்தல்
    3) பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல்
    4) ஒற்றுமையாக ஒன்று கூடுவதற்கான உரிமை

10. இலங்கையில் உள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை.
    1) 25 2) 21 3) 22 4) 24

11. சனநாயக ஆட்சி முறை இடம்பெறும் ஒரு நாட்டில் அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதால் ஏற்படும் நன்மைகளாவன.

1) அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல்

2) நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படல்

3) ஆட்சியாளர்கள் தன்னிச்சையாக செயற்படல்

4) சட்டத்தின் முன் சகலரு சமம்

12. எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்திருக்கும் ஆட்சி முறை.

1) சனநாயக ஆட்சி 2) ஒற்றை ஆட்சி

3) சமஷ்டி ஆட்சி 4) சர்வாதிகார ஆட்சி

13. இலங்கையில் நிலப்பரப்பில் சிறிய மாவட்டமும், சனத்தொகை செறிவு மிக்கதுமான மாவட்டம் அமைந்துள்ள மாகாணம்.

1) வடமேல் மாகாணம் 2) தென்மேல் மாகாணம்

3) வடமத்திய மாகாணம் 4) மேல்மாகாணம்

14. பாராளுமன்றத்தாலும், பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுத் துறையாலும், சுயாதீன நீதித்துறையாலும் உருவாக்கப்படும் அரசாங்க முறை.

1) சனாதிபதி அரசாங்கம் முறை 2) பாராளுமன்ற அரசாங்கமுறை

3) சுயாதீன அரசாங்கமுறை 4) பிரதமர் அரசாங்க முறை

15. அரசாங்கத்தின் துறைகளாக அமையாதது.

1) ஊடகத்துறை 2) நிறைவேற்றுத்துறை 3) நீதித்துறை 4) சட்டத்துறை

16. சட்டத்துறையின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவது.

1) ஜனாதிபதியால் 2) நிறைவேற்றுத்துறையால்

3) நீதித்துறையால் 4) சட்டத்துறையால்

17. பெயரளவு நிர்வாகம் காணப்படும் அரசாங்க ஆட்சிமுறை எது?

1) ஜனாதிபதி அரசாங்க முறை 2) கூட்டாட்சி முறை

3) பாராளுமன்ற அரசாங்க முறை 4) மத்திய அரசாங்கமுறை

18. ஜனாதிபதி அரசாங்க முறையில் நிறைவேற்றுத் துறையின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துபவர்.

1) ஜனாதிபதி 2) பிரதமர் 3) சபாநாயகர் 4) முதலமைச்சர்

19. ஒரு நாட்டிலுள்ள சகல பிரஜைகளும் ஒன்று கூடி நிர்வாக விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல்.

1) மறைமுக ஜனநாயகம் 2) நேரடி ஜனநாயகம்

3) யாப்பு மயப்படுத்தப்பட்ட ஜனநாயகம் 4) பிரதிநிதித்துவ ஜனநாயகம்

20. அரசின் விருப்பையும் மக்களின் எதிர்பார்ப்பையும் நடைமுறைப்படுத்தும் பிரதிநிதியாக கருதப்படுவது / கருதப்படுபவர்?

1) ஜனாதிபதி 2) பிரதமர் 3) சபாநாயகர் 4) அரசாங்கம்

(20 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

*(01)* *01)* ஜனநாயகம் தொடர்பாக வரைவிலக்கணம் முன் வைத்த இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக?

*02)* நேரடி ஜனநாயகத்தில் வாக்குரிமை மறுக்கப்பட்ட பிரிவினரில் இருவரைக் குறிப்பிடுக?

*03)* உரிமைகள் பாதுகாக்கப்பட்ட சமூகத்தில் காணப்படும் பண்புகள் இரண்டு தருக?

*04)* தேசிய அரசின் மூலக்கூறுகள் இரண்டைக் குறிப்பிடுக?

*05)* தேசிய அரசு பரவலடைவதற்குரிய சிந்தனைகளை முன்வைத்த அறிஞரகள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக?

*06)* பல அரசியல் கட்சிகள் செயற்படும் நாடுகள் இரண்டு தருக?

*07)* உரிமைகளை வென்றெடுப்பதற்காக வரலாற்றில் இடம்பெற்ற புரட்சிகள் இரண்டைக் குறிப்பிடுக?

*08)* இலங்கையில் தேர்தல் மாவட்டங்கள் எத்தனை? அவற்றைப் பிரிப்பதற்கான பணியைச் செய்யும் அமைப்பு எது?

*09)* இலங்கை வாக்காளர்கள், வாக்களிக்கக்கூடிய இரு தேர்தல்களைப் பெயரிடுக?

*10)* ஐரோப்பாவில் ஆரம்பகாலத்தில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகள் இரண்டு தருக?

(10 x 2 = 20 புள்ளிகள்)

*(02)* *01)* அரசாங்க முறைகளின் வகைகள் இரண்டையும் தருக?

*02)* அரசின் பிரசைகள் மீதான பொறுப்புக்கள் மூன்று தருக?

*03)* ஜனநாயக ஆட்சி முறை வெற்றி பெற அவசியமான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

*(03)* *01)* சனநாயக ஆட்சி முறையின் பிரதான பிரிவுகள் இரண்டும் எவை?

*02)* நேரடி சனநாயக ஆட்சி முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள் மூன்று தருக?

*03)* ஜனநாயக ஆட்சிமுறையின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

(04) 01) தற்கால உலகில் காணப்படும் கட்சிகளின் வகைகளைக் குறிப்பிடுக?

02) அரசியல் கட்சி முறையின் அனுகூலங்கள் மூன்று தருக?

03) சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்க்கட்சியின் பொறுப்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

(05) 01) தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் எந்த மன்றங்கள், நிறுவனங்களுக்குரிய பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்?

02) பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக தற்காலத்தில் நடைமுறையில் உள்ள தேர்தல் முறைகள் எவை?

03) தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதால் கிடைக்கும் நன்மைகள் மூன்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

(06) 01) மக்கள் தகவல்களை அறியப் பயன்படுத்தும் ஊடகங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

02) சுதந்திர ஊடகங்களால் நிறைவேற்றப்படவேண்டிய பொறுப்புக்கள் மூன்று தருக.?

03) அரசுகளின் மூலக்கூறுகள் நான்கைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)